


# 01.11. 2024

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் கேரளம் மாநிலங்கள் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

2. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான ட்ரோன் திட்ட செயல்பாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3. ரயில் டிக்கெட் முன்பதிவிற்கான கால அவகாசம் 60 நாட்களாக குறைக்கப்பட்ட புதிய நடைமுறை இன்று அமலுக்கு வந்துள்ளது.

4. சண்முகா நதியிலிருந்து உபரிநீர் முழுவதும் வெளியேற்றப்படுவதால் தேனி மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. மும்பையில் இந்தியாவிற்கு எதிரான 3-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 5 விக்கெட் இழப்பிற்கு 161 ரன் எடுத்திருந்தது.

## இனி விரிவான செய்திகள்

***********

### மாநிலங்கள் உருவான தினம்

தமிழகம், கர்நாடகா கேரளா, ஆந்திரா, சட்டீஸ்கட், ஹரியானா, மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆகிய மாநிலங்கள் மற்றும் லட்சத்தீவு புதுச்சேரி யூனியன் பிரதேசங்கள் மொழிவாரியாக பிரிக்கப்பட்ட தினத்தை ஒட்டி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் நாட்டின் வளர்ச்சிபாதையில் இம்மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் ஆற்றிய பங்கை எடுத்துரைத்தார்.

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் விடுத்த செய்தியில் நாட்டின் வளத்திற்கும், அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் இந்நாடுகள் தொடர்ந்து சிறப்பாக செயலாற்ற வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி, வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இம்மாநிலங்களில் மகிழ்ச்சியும், வெற்றியும், தளைத்தோங்க வாழ்த்தியுள்ளார்.

***********

**முதலமைச்சர் எல்லை போராட்ட நாள்**

தமிழர் வாழும், தமிழ் மொழி பேசப்படும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காக போராடிய அனைவரையும் எல்லை போராட்ட தியாகிகள் தினத்தில் வணங்குவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தெற்கிலும், வடக்கிலும் பல இடங்களில் போராடி தமிழகத்தின் எல்லையை காத்த வீரர்களை நினைவு கூறுவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

***********

**கன்னியாகுமரி**

இதன்ஒருபகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய போராடிய மார்ஷல் நேசமணியின் நினைவை போற்றும் வகையில் நாகர்கோவிலில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கையில்**

**வாய்ஸ்**

***********

**சேலம் நிறுவன நாள்**

தமிழகத்தின் பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்றான சேலம் நகரம் 159 ஆவது ஆண்டில் இன்று அடியெடுத்துள்ளது.

இந்நாளை ஒட்டி வரலாற்று சின்னங்களை பாதுகாக்க வலியுறுத்தி மாவட்ட வரலாற்று சங்கத்தின் சார்பில் மரபு நடை பயணம் இன்று நடைபெற்றது.

***********

**ட்ரோன்**

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான ட்ரோன் திட்ட செயல்பாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் கீழ் இயங்கும் வேளாண் செயலர்கள் நிலையிலான அதிகாரிகள் இந்த திட்டத்தை கண்காணிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ட்ரோன் மற்றும் அதுசார்ந்த உபகரணங்களுக்கான கொள்முதலுக்காக 80 சதவிகித நிதியாக 8 லட்சம் ரூபாயை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மத்திய அரசு வழங்க உள்ளது.

எஞ்சிய தொகை தேசிய வேளாண் கட்டமைப்பு நிதி இயக்கத்தின் மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக்குழுவை சேர்ந்த ஒருவருக்கு 15 நாள் கட்டாய ட்ரோன் இயக்க பயிற்சியும், உரங்களை தெளிப்பதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது.

உரத்தொழிற்சாலைகள் மத்திய மாநில அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இந்த பயிற்சியை வழங்க உள்ளன.

வெளிப்படையான செயல்முறை மூலம் உரத்தொழிற்சாலைகள் ட்ரோன் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நெறிமுறைகளை பின்பற்றி ஆக்கப்பூர்வமான முறையில் இந்த திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல வேளாண் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒருபகுதியாக அந்தியோதயா, தீன் தயாள் திட்டத்தின் கீழ், 14 ஆயிரத்து 500 சுய உதவிக்குழுவினருக்கு ட்ரோன் வழங்க வேளாண் அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

***********

**ராஜேஷ்குமார் சிங்**

நாட்டின் பாதுகாப்புத்துறை செயலாளராக ராஜேஷ்குமார் சிங் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

முன்னதாக புதுதில்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கேரள மாநிலத்தை சேர்ந்த திரு.ராஜேஷ்குமார் சிங் 1989ஆம் ஆண்டு பிரிவுவை சேர்ந்த குடிமை பணி அதிகாரியாவார்.

தொழில்துறை மேம்பாடு, உள்நாட்டு வர்த்தகதுறை செயலாளர் கேரள நிதித்துறை செயலர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட செயலாற்றியவர்.

***********

## Garud Shakti -24

இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் இந்தியா இந்தோனேசியா நாடுகள் பங்கேற்கும் Garud Shakti 9ஆவது கூட்டு ராணுவ பயிற்சி இன்று தொடங்குகிறது.

வரும் 12ஆம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சியில் இந்திய பாராசூட் சிறப்பு படையினரும்,

இந்தோனேசியாவின் ராணுவ படையின் சிறப்பு பிரிவினரும் பங்கேற்கின்றனர்.

பரஸ்பர புரிந்துணர்வு, செயலாக்க திட்டங்கள், ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பரிவர்த்தனைகளை நோக்கமாக கொண்டு இப்பயிற்சி இடம்பெறுகிறது.

***********

**தேர்தல்**

ஜார்கண்ட் மாநிலத்தில் 38 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு 2-ம் கட்டமாக வரும் 20-ம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவிற்கான வேட்புமனுக்களை திரும்பபெறுவதற்கான கால அவகாசம் இன்று நிறைவடைகிறது.

இறுதி வேட்பாளர் பட்டியல் இன்றுமாலை வெளியிடப்படும்.

இம்மாநிலத்தில் வரும் 13ஆம் தேதி 43 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவில் 685 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதனிடையே மஹாராஷ்டிரா மாநிலத்தில் 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 20ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை திரும்பபெற வரும் திங்கட்கிழமை கடைசிநாளாகும்.

***********

ரயில் முன்பதிவு காலம்

ரயில்களில் முன்பதிவு செய்வதற்கான கால அவகாசம் 120 நாட்களிலிருந்து 60 நாட்களாக குறைக்கப்பட்ட புதிய நடைமுறை இன்றுமுதல் நடைமுறைக்கு வந்தது.

120 நாட்கள் என்ற நடைமுறையில் 21 சதவிகிதம் பயண சீட்டுகள் ரத்து செய்யப்படுவதாலும்,

டிக்கெட் பதுக்கல் நடைபெறுவதாலும் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் இருக்காது எனவும்,

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கான 365 நாள் முன்பதிவு வரம்பு மாற்றப்படாது எனவும் ரயில்வே அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

***********

ரயில்

தீபாவளி விடுமுறை முடிவடைந்து பயணிகள் மீண்டும் சென்னை திரும்புவதற்காக முக்கிய நகரங்களிலிருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு தீபாவளி பண்டிகைக்கு முன்பு இரண்டு நாட்களில் இயக்கப்பட்ட ரயில்களில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்துள்ளனர்.

இதனிடையே தீபாவளி விடுமுறை முடித்து சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக வரும் ஞாயிற்றுக்கிழமை வரை சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

***********

சிலிண்டர்

வணிக பயன்பாட்டிற்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை பெருநகரங்களில் 62 ரூபாய் உயர்த்தப்பட்டு ஆயிரத்து 802 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

இதற்கான அறிவிப்பை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன.

இருப்பினும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

***********

**முதலமைச்சர் நிவாரணம்**

கோயம்புத்தூர் மாவட்டம் கோட்டூர் அருகே சாலை விபத்தில் உயிரிழந்த பெண் காவல் துறை உதவி ஆய்வாளரின் குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

***********

**சண்முகாநதி**

மேகமலை வனப்பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக தேனி மாவட்டம் சண்முகா நதி இன்று நிரம்பியுள்ளதை அடுத்து உபரிநீர் முழுவதும் வெளியேற்றப்படுவதால் கரையோர பகுதி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

***********

**சதய விழா**

தஞ்சை பெரிய கோவிலில் மாமன்னன் ராஜராஜசோழனின் ஆயிரத்து 39ஆவது சதய விழாவை முன்னிட்டு பந்தக்கால் நடும் விழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**இருவரி**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை** பயிர் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் மாவட்ட அரசு தென்னை உற்பத்தி பண்ணையில் விற்கப்படும் தரமான தென்னை மரக்கன்றுகளை வாங்கி பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சரயு கேட்டுக்கொண்டுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் அரசு பள்ளி** மாணாக்கர் NEET, JEE உள்ளிட்ட நுழைவு தேர்வு எழுத வார இறுதி நாட்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

***********

**கோவில்**

திருச்செந்தூர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்தசஷ்டி திருவிழா நாளை யாகசாலை பூஜையுடன் தொடங்குகிறது

முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 7-ம் தேதியும்,

திருக்கல்யாணம் 8ஆம் தேதியும் நடைபெறும்.

***********

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், **திருச்சி, தேனி, திண்டுக்கல், மதுரை விருதுநகர் புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர்** நாகை மயிலாடுதுறை சிவகங்கை தென்காசி தூத்துக்குடி ராமநாதபுரம் சேலம் நாமக்கல் தர்மபுரி அரியலூர் பெரம்பலூர் கடலூர் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

**இந்நிலையில் திருச்சியில் தற்போது கன மழை பெய்து வருகிறது.**

***********

**கிரிக்கெட்**

மும்பையில் இந்தியாவிற்கு எதிரான 3-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 5 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்திருந்தது.

வாஷிங்டன் சுந்தர் மற்றும் ரவீந்திர ஜடேஜா தலா 2 விக்கெட்டையும், ஆகாஷ் தீப் 1 விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

***********

**டென்னிஸ்**

ஃபிரான்ஸில் நடைபெறும் பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் எப்டன் இணை – நெதர்லான்ஸின் **Wesley Koolhof** குரேசியாவின் **Nikola Mektic** இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********